## December 5, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 23-ஆவது இந்திய- ரஷிய உச்சி மாநாட்டில் பங்கேற்க ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் இந்தியா வந்தார். புது தில்லியில் அவரை பிரதமர் மோடி தேரில் ஆரத்தழுவி உற்சாகமாக வரவேற்றார்.
   - i. அதேவேளையில் ரஷியா, ஆர்மீனியா, பெலாரஸ், கஜகஸ்தான், கிரிகிஸ்தான் நாடுகள் அடங்கிய யூரேஷியன் பொருளாதார யூனியனுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள இந்தியா திட்டமிட்டுள்ளது. இவை குறித்து மாநாட்டில் இரு நாடுகள் தரப்பிலும் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   - ii. ரஷியாவிடம் இருந்து தரையில் இருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்புகளை கூடுதலாக கொள்முதல் செய்ய ரஷியாவிடம் இந்தியா ஆர்வம் தெரிவித்தது. பாகிஸ்தானுக்கு எதிரான 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் போது அந்த வான்பாதுகாப்பு அமைப்புகள் மிகவும் திறன்வாய்ந்ததாக செயல்பட்ட நிலையில், அவற்றைக் கூடுதலாக கொள்முதல் செய்ய இந்தியா ஆர்வம் தெரிவித்தது.
2. டி20 கிரிக்கெட் லீக் போட்டிகளில், 600 விக்கெட்டுகள் சாய்த்த முதல் பௌலராக மேற்கிந்தியத் தீவுகள் ஸ்பின்னர் சுனில் நரைன் சாதனை படைத்தார்.
3. விதி 267-இன்கீழ் ஏற்கெனவே பட்டியலிடப்பட்ட விவகாரங்கள் மீது மட்டுமே விவாதம் நடத்த முடியும் என மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் எதிர்க்கட்சிகளிடம் கண்டிப்புடன் தெரிவித்தார்.
   - i. கடந்த 20 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அமர்வின்போதும் விதி 267-இன்கீழ் ஏற்கெனவே பட்டியலிடப்பட்ட விவகாரங்களை தவிர்த்து வேறு சில விவகாரங்கள் மீது விவாதம் நடத்த எதிர்க்கட்சிகள் வலியுறுத்துவது தொடர்கதையாக நீடித்து வருகிறது. ஆனால் அவர்களின் கோரிக்கைகள் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.
   - ii. இந்நிலையில், கடந்த திங்கள்கிழமை தொடங்கி நடைபெற்று வரும் நாடாளுமன்ற குளிர்காலக கூட்டத்தொடரிலும் இந்த விதியின்கீழ் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அளிக்கும் நோட்டீஸ்களை மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் நிராகரித்து வருகிறார். அன்றாட அவை அலுவல்களுக்கு இடையூறு ஏற்படுத்தவே இந்த நோட்டீஸ்களை எதிர்க்கட்சிகள் தவறாகப்பயன்படுத்துவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.
   - iii. 3 முறை மட்டுமே விவாதம்: இது குறித்து மாநிலங்களவையில் அவர் பேசியதாவது: முன்னாள் குடியரசு துணைத் தலைவர் கிரிஷண்காந்த் தலைமையில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி மற்றும் சட்ட நிபுணர் ஃபாலி நாரிமன் ஆகியோர் அடங்கிய குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விதி 267-இல் 2000-ஆம் ஆண்டு மே.15-இல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி பட்டியலிடப்படாத விவகாரங்களை விவாதிக்க இந்த விதியை பயன்படுத்துவதை தவிர்க்க அந்தக் குழு பரிந்துரைத்தது.
     1988 முதல் 2000 வரை இந்த விதி 3 முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 2000-இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபின் இதுவரை விதி 267-இன்கீழ் விவாதம் நடைபெற்றதில்லை.
   - iv. அரசியலமைப்பின் பிரிவு 75(3) இன் கீழ் அனுமதிக்கப்படும் மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மானத்துடன் மாநிலங்களவையில் விதி 267 ஐ சமப்படுத்த முடியாது என்று அவர் தெரிவித்தார்.
4. சிகரெட் உள்ளிட்ட புகையிலைப் பொருள்கள் மீது கலால் வரி விதிக்க வகை

செய்யும் 'மத்திய கலால் திருத்தச் சட்ட மசோதா 2025' நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்டது.

i. முன்னதாக, இந்த மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் அளித்தது. அதைத் தொடர்ந்து, அந்த மசோதாவை மாநிலங்களவையில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிமுகம் செய்தார். அப்போது, குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, மக்களவைக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது.
ii. தற்போது சிகரெட், புகையிலை, ஹுக்கா, ஜர்தா உள்ளிட்ட பிற புகையிலைப் பொருள்கள் மீது 28 சதவீத ஜிஎஸ்டியும் கூடுதலாக செஸ் வரியும் விதிக்கப்படுகின்றன.
iii. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய மசோதா சட்டமானால், உற்பத்தி செய்யப்படாத புகையிலைப் பொருள்கள் மீது 60 முதல் 70 சதவீத கலால் வரி விதிக்க பரிந்துரைக் கப்பட்டுள்ளது. சுருட்டு வகைகள் மீது 25 சதவீத கலால் அல்லது 1,000 சுருட்டுகளுக்கு ரூ.5,000 வீதம் வரி விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 65 மி.மீ. நீளம் கொண்ட ஃபில்டர் இல்லாத சிகரெட்டுகளுக்கு 1,000 சிகரெட்டுகளுக்கு ரூ. 2,700 வீதமும், 65 மி.மீ. முதல் 75 மி.மீ. நீளம் கொண்ட சிகரெட்கள் மீது ரூ.4,500 அளவிலும் கலால் வரி விதிக்கப்படும்.
iv. மத்திய அரசு சார்பில் முன்மொழியப்பட்டுள்ள 'சுகாதார மற்றும் தேசிய பாதுகாப்பு செஸ் (கூடுதல் வரி) அத்தியாவசியப் பொருள்கள் மீது விதிக்கப்படாது; மாறாக, பான் மசாலா போன்ற தகுதியற்ற பொருள்களை மக்கள் கைவிட வேண்டும் என்பதற்காக விதிக்கப்படுகிறது.

5. மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படும் கதிரியக்க மருத்துவ உபகரணங்களை எதிர்விளைவுகளின் அடிப்படையில் மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு வகைப்படுத்தியுள்ளது.
   i. அதன்படி, மொத்தம் 119 உபகரணங்கள், அதன் தன்மைக் கேற்ப வகை - 'ஏ' முதல் 'டி' வரையிலான பாதுகாப்பு வரையறைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.
   ii. மருத்துவ சாதனங்களின் தரம் மற்றும் பாதுகாப்பை பல்வேறு நிலைகளில் மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு உறுதி செய்து வருகிறது. அந்த வகையில், கதிரியக்க சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் எதிர்விளைவுகள் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. அதில், வகை ஏ-வின் கீழ் ஒரு உபகரணமும் பி-யின் கீழ் 25 உபகரணங்களும், சி-யின் கீழ் 75 உபகரணங்களும், டி-யின் கீழ் 18 உபகரணங்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
   iii. ‘ஏ’ வகை என்பது மிகக்குறைந்த ஆபத்தும், 'பி' என்பது குறைந்த ஆபத்தும், 'சி' என்பது மிதமான ஆபத்தும், 'டி' என்பது அதிக ஆபத்தும் கொண்டவை என மருத்துவ உபகரண வரைமுறை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
6. காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத் தலைவர் - எஸ்.கே.ஹல்தர் தெரிவித்தார்.
7. திரைப்படத் தயாரிப்பாளர் ஏவிஎம் சரவணன் (86) சென்னையில் காலமானார்.
   i. இந்திய திரைத் துறையில் பழைமையான திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்று 'ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்'. தமிழ் உள்பட பல்வேறு மொழிகளில் 300-க்கும் மேற்பட்ட திரைப்படங்களை ஏவிஎம் நிறுவனம் தயாரித்துள்ளது.
   ii. இதன் நிறுவனர் ஏவி.மெய்யப்ப செட்டியாரின் மகன்களில் ஒருவர்தான் ஏவிஎம் சரவணன்.
   iii. 1945- ஆம் ஆண்டு ஏவிஎம் நிறுவனம் தொடங்கப்பட்டது.